
இலவச வெளியீடு

போதைப் பொருட்கள்



எல்லா மக்களும் அறியவேண்டிய அடிப்படை உண்மைகள்!

டாக்டர் க. சுகுமார் எம். பி. பி. எஸ். (இலங்கை)

இன்று வட பிரதேசத்தில் போதைப் பொருளின் பாவனை எவ்வாறுள்ளது?

பல நூற்றாண்டுகளாக இலங்கை முழுவதிலுமே அபின், கஞ்சா போன்றவற்றின் பாவனை இருந்துவந்துள்ளது. ஆனால் இவற்றைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை எப்போதும் ஓரளவிற்கு குறைவானது என்றே கூறவேண்டும். அபின் ஆயுர்வேத வைத்தியர்களினால் சிகிச்சையில் பாவிக்கப்பட்டு வருகின்றது. கடந்த பல ஆண்டுகளாக தமிழ்ப் பிரதேசத்தில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக புதிய வகைப் போதைப் பொருட்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எமது இளைஞர்களிற் பலர் வேலைவாய்ப்பிற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் வெளிநாடுகள் பலவுக்கும் சென்று புதிய போதைப் பொருட்களின் அறிமுகத்தைப் பெற்றார்கள். இவர்களிற் பலர் இன்று இதற்கு அடிமையாகிவிட்டார்கள். இன்றும் பலர் இவற்றின் கடத்தலில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது இவர்களிற் பலர் நாடுதிரும்பியுள்ளனர். இவர்கள் இந்த அடிமை நிலையுடன் இங்கு வந்துள்ளனர். அத்துடன் இங்குள்ளவர்களுக்கும் இப்பழக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். இன்று யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் இவ்வாறான அடிமை நிலைக்குட்பட்ட பலர் சிகிச்சை பெற்றுள்ளனர், பெற்று வருகின்றனர். இன்று இலங்கையில், குறிப்பாக வடபிரதேசத்தில் கொடிய புற்று நோய் போன்று அசுரவேகத்தில் பரவிவரும் போதைப் பொருட்களில் மிக முதன்மையானதும் மிகவும் கொடியதுமான போதைப் பொருள் ஹெறோயின் (Heroin) ஆகும். இப்பொருள் ஏனைய நாடுகள் பலவற்றில் கடந்த பத்தாண்டுகளில் பல பாரிய பிரச்சனைகளை ஏற்படுத்தி சீரழித்து வருகிறது. இன்று எமது பிரதேசத்தையும் வேகமாக ஆக்கிரமித்து வரும் இவற்றின் பாவனை முளையிலேயே கிள்ளி எறியப் படவேண்டும்.

போதைப் பொருட்கள் என்றால் என்ன ?

மனிதனால் உட்கொள்ளப்படும் போது அவனது உடலில், மனத்தில், நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இரசாயனப் பொருட்களே போதைப் பொருட்களாகும். கஞ்சா, ஹஸிஸ் (Hashish), அபின் (Opium), ஹெறோயின் (Heroin), மோர்பின் (Morphine), அம்பெற்றமீன்கள் (Amphetamines), தூக்க மாத்திரைகள் (Tranquilzers) கொக்கெயின் (Cocaine), எல். எஸ். டி. (L.S.D), மதுபானம், புகையிலை போன்றவை போதைப் பொருட்களாகும். இவற்றில் சில சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. சில மருத்துவத்துறையில் நோயாளிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இன்னும் சில எவ்வித நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படுவதில்லை. அதாவது இவை (உதாரணமாக கஞ்சா, எல்.எஸ்.டி. போன்றவை) சமு

தாயத்திலுல் ஏற்றுக்கொள்ளப்பட்டவையுமல்ல, மருத்துவத்துறையி லும் பாவிக்கப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்ட அனைத்து போதைப் பொருட்களுமே மனி தனுக்கு வேறுபடும் அளவுகளில் அடிமை நிலையை (Addiction) ஏற்படுத்தவல்லன. இங்கு அடிமைநிலை என்பதன் கருத்து, இப்பொருட் களை பாவிக்கும் மனிதன் நாளடைவில் அப்பொருளில் உளரீதியாக வும், உடல்ரீதியாகவும், தங்கி நிற்கவேண்டிய (Dependence) நிர்ப் பந்தத்திற்கு உள்ளாவதாகும் அதாவது இந்தப் பொருட்களை அவன் பாவிக்காமல் வாழமுடியாத ஓர் நிலை ஏற்படும். இந்த நிலை குறிப் பிட்ட சில போதைப் பொருட்களால் (உதாரணமாக ஹெரோயின், எல்.எஸ்.டி போன்றவற்றால் மிகவும் மோசமான முறையில் ஏற்படுத் தப்படலாம். இது ஒரு வழிப்பாதையாக மாறி இறுதியில் அந்த மனி தனை, இந்த கொடிய பொருள் மீளமுடியாத ஆழத்தினுள் அமிழ்த்தி விடும்.

இலங்கையில் பாவிக்கப்படும் போதைப்பொருட்களிற் சில :

அபின் (OPIUM)

அபின் என்பது பொப்பி (Poppy) என்னும் தாவரத்தின் பழுக்காத வித்துறையிலிருந்து (Unriped Capsule) பெறப்படும் கட்டிபட்ட சாறு (Juice) ஆகும். இத்தாவரம் இலங்கையில் பயிரிடப்படுவதில்லை. முன்பு குறிப்பிட்டவாறு ஆயுர்வேத வைத்தியர்களால் பாவிக் கப்பட்டு வருகிறது. போதையை ஏற்படுத்த இலங்கை மக்கள் பல காலமாக அபினை பாவித்து வருகிறார்கள். இது வாய் மூலமும் புகை யாகவும் உடலினுள் உள்ளெடுக்கப்படலாம்.

மோர்பின் (MORPHINE)

அபினின் பிரதான கூறு மோர்பின் ஆகும். இது அபினிலி ருந்து இரசாயன முறையினுல் பிரித்து எடுக்கப்படும். இந்த மோர் பின் என்ற பொருள் மருத்துவத்துறையில் மிக முக்கிய இடத்தை பெற்றுள்ளது. மிகவும் மோசமான வேதனைக்கு (Pain) கொடுக்கப் படும் மருந்துகளில் இன்றும் முக்கிய இடத்தை இது வகிக்கின்றது. மோர்பின் பொதுவாக ஊசிமூலம் உட்செலுத்தப்படும். இலங்கையில் இப்பொருளை போதைப் பொருளாக பாவிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும்.

ஹெறேயின் (HEROIN)

இது பவுடர் (Powder) குடு (Kudu) போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும். மேலே குறிப்பிட்ட மோர்பினே ஓர் இரசாயன தாக்கத்திற்கு உட்படுத்தும் போது ஹெறேயின் கிடைக்கிறது. இது மோர்பினைவிட பத்து மடங்கு வீரியமானதும், அதிகளவு அடிமைநிலையை ஏற்படுத்தவல்லதுமாகும் ஹெறேயின் வெள்ளை அல்லது மண்ணிறத் தூளாக பொலித்தீன் அல்லது ஈயத்தாளில் (சிகரெட் சுற்றப் பயன்படுத்தப்படுவது) சுற்றப்பட்டு விற்கப்படுகிறது. வழக்கமாக ஈயத்தாளின் மீது இந்தத் தூளை இட்டு, அதன் கீழே சூடேற்றும் போது வரும் புகை உட்கொள்ளப்படும். சிலர் சிகரெற்றுடன் கலந்து புகைப்பார்கள். ஊசி மூலமும் செலுத்தப்படலாம்.

கஞ்சா (GANJA OR CANNABIS)

இது Cannabis sativa என்னும் தா வ ர த் தி லி ரு ந் து பெறப்படுகிறது. இத்தாவரம் இலங்கையின் பல இடங்களில் சட்டவிரோதமாக பயிரிடப்படுகிறது. தாவரத்தின் இலை, தண்டு, பூவின் நுனி ஆகியவற்றிலிருந்து கஞ்சா பெறப்படுகிறது. கஞ்சா ஓர் பூண்டுக் கலவை அல்லது கடும் மண்ணிற பிசின் போன்ற பொருளாகும். இது புகையிலையுடன் (சிகரட், பீடி, சுருட்டு) கலந்து புகைக்கப்படலாம்.

போதைப் பொருட்களால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன?

- போதை நிலையில் விபத்து ஏற்படலாம்.
- மிதமிஞ்சிய அளவு (Overdose) உபயோகம், மனோவியாதி (Psycosis), வலிப்பு, அறிவற்றநிலை (Coma), மரணம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.
- சில சுவாசத்தை நிறுத்தவல்லன.
- குழப்பமான மனநிலை, பயங்கர மாயக்காட்சிகள் உண்டாகலாம்
- உளவியற் கோளாறுகள் பல ஏற்படலாம்.
- தொடர்ச்சியாக பாவிப்பவர்களுக்கு நாளடைவில் அவற்றிலேயே தங்கியிருக்கும் நிலையும் அவற்றிற்கு அடிமையாகும் நிலையும் ஏற்படும்.
- ஊசிமூலம் உட்செலுத்தும்போது கிருமிநீக்கப்படாத உபகரணங்கள் பாவிக்கப்படுவதால் புண், சீழ்க்கட்டி, குருதி நஞ்சேறல் (Septicaemia), செங்கமாரி, எய்ட்ஸ் (AIDS) போன்றவற்றை ஏற்படுத்தலாம். அண்மைக் காலத்தில் உலகின் அதி பயங்கர கொல்லும் நோயான எய்ட்ஸ் பரவுவதற்குரிய காரணிகளில் ஒன்றுக இந்த போதைப்பொருள் ஊசியேற்றலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

போதைப் பொருள் பாவிப்பவரில் ஏற்படும் அறிகுறிகள் என்ன?

- O அதிபரவசநிலை (Euphoria)
- O உடல், மனம் தளர்ச்சியடைந்தநிலை (Relaxed State)
- O இதய, நாடித்துடிப்புகள் அதிகரித்தல்
- O கண்கள் சிவப்படைதல்
- O நித்திரையின்மை
- O பசி அதிகரித்தல்
- O கண்கள், மூக்கு ஆகியவற்றிலிருந்து நீர் வடிதல்
- O நடத்தை ஒழுங்கற்றுப்போதல்
- O பேச்சு தடுமாறல்
- O ஓங்காளம்
- O போலி கற்பனை, உளமாயம்.

நாளடைவில் ஒருவரின் நடத்தையில் பின்வரும் மாற்றங்களை அவதானிக்கலாம்;

- O மகிழ்வும் உற்சாகமும் உள்ள மனநிலை திடீரென சிடுசிடுப்பும் மந்தமுமான மனநிலைக்கு மாறுதல்.
- O எதிர்பாராத முன்கோபம் அல்லது சண்டை பிடித்தல்
- O பசியின்மை
- O தனது தோற்றத்தில் கவலையீனமாக இருத்தல்.
- O மாணவனுயின் படிப்பு, விளையாட்டு, வீட்டுவேலை போன்றவற்றில் நாட்டம் குறைதல்.
- O பொய் சொல்லுதல்.
- O அடிக்கடி அரைத்தூக்கம் அல்லது தூக்கமின்மை
- O வீட்டிலிருந்து பணம், பொருள் களவெடுத்தல்.
- O உடலில் அல்லது உடமைகளில் வழமைக்கு மாறுன மணம் வீசுதல் அல்லது கறைகள், அடையாளம் காணப்படுதல்.
- O வழமையாக காணப்படாத தூள்கள், மாத்திரைகள், தீ பட்ட ஈயத்தாள், தீப்பெட்டிகள், ஊசிகள் வீட்டில் காணப்படுதல்.

ஏன் ஒருவர் போதைப் பொருளை பாவிக்க ஆரம்பிக்கிறுர்?

- ★ நண்பர்களின் தூண்டுதலினுல் அல்லது நெருக்குதலினுல்
- ★ இந்தப் பொருட்களைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தினுல் (Curiosity)
- ★ பரிசோதனை முயற்சியாக
- ★ ஓர் "கிக்" (" Kick ") பெறுவதற்கு
- ★ மனேரீதியான பிரச்சனைகளிலிருந்து தப்பித்து இன்னேர் உலகத்தில் சஞ்சரிப்பதற்கு.

போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

எந்தவொரு இன்பம் தரும் பழக்கத்தையும் மனிதன் பழகிவிட்டால் அதை கைவிடுவது மிகவும் கடினமானது எனக் கூறியுள்ளார் உளவிய லாளரான சிக்மண்ட் ப்ராயிட் (Sigmund Freud). அந்த இன்பம் தரும் பழக்கம் மனிதனை எவ்வகையிலும் பாதிக்காவிடில் பாதகமில்லை. ஆனால் போதைப் பொருட்கள் மனிதனின் உடலையும் உள்ளத்தையும் பாதித்து மனிதனை மரணவாசலுக்கு கொண்டு செல்கின்றது. எனவே இறுதியில் துன்பத்தை நிச்சயமாகத் தரும் போதைப்பொருட்களை எவருமே பாவிக்கக்கூடாது. இதனால் குடும்பம், சமூகம், நாடு போன்ற அனைத்துமே பாதிக்கப்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றில் சுதந்திர போராட்ட உணர்வை மழுங்கடிக்க இப்பொருட்கள் எதிர்ப்பாளர் களால் புகுத்தப்படுவது வழமை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. முன்பு குறிப்பிட்டவாறு ஒரு சில பொருட்கள் மட்டும் மருத்துவத் துறையில் ஓர் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட காலத்திற்கு மருத்துவ ரின் ஆலோசனையுடன் பாவிக்கப்படுகின்றன. மருத்துவக் காரணமல் லாது, இன்பத்தைப் பெறுவதற்காக மட்டும் எந்தப் போதைப் பொரு ளையும் பாவிப்பது மிகவும் ஆபத்தானது. போதைப் பொருட்களை பாவிப் பவர்கள் (குறிப்பாக ஹெரோயின்) இளம் வயதினராகும். பெற்றோர் கள் பிள்ளைகளின் வளர்ப்பில் மிகவும் அக்கறையுடன் இருக்கவேண் டும். இங்கு பிள்ளைகளின் உணவு, உடை, பணம் போன்ற தேவை களுடன் மனோரீதியான தேவைகளும் (உதாரணம் அன்பு) வழங்கப் பட வேண்டும். தாம் ஒதுக்கப்பட்டவர்கள், தமது தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படாமல் பெற்றோர் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைவிட மனோரீதியான பிரச்சனையுள்ளவர்களை உற்றார், உறவினர் கரிசனையுடன் கவனித்து மருத்துவ உதவியைப் பெறுவதற்கு உதவவேண்டும்.

"வாழ்வு என்பது இன்பந்தரக்கூடியதும் பயனுள்ளதுமான ஓர் அனுபவம்" என்ற தத்துவம் இளைஞர்களுக்கு புரியவைக்கப்படவேண் டும். இதற்கு இளைஞர்கள் செயற்கையான உபாயங்களைப் (அதாவது போதைப் பொருட்களை) பாவித்து இன்பம்பெற முயற்சிக்காமல் இயற்கையான மாற்று (Alternative) வாழ்க்கைமுறைகளில் ஈடு பட்டு வாழ்வை இன்பமயமாக்கலாம் என்ற செய்தி பெரியோராலும் ஆசிரியர்களாலும் கொடுக்கப்படவேண்டும். மாற்று வாழ்க்கைமுறை களுக்கு உதாரணமாக சமயம், சமூகசேவை, விளையாட்டு, நாடகம், இலக்கியம், பொழுதுபோக்குகள் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடு வதை குறிப்பிடலாம். இவ்விதம் பயனுள்ளமுறையில் ஒருவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்போது, வாழ்க்கையும் அர்த்தமுடையதா

கின்றது. வருமுன்காப்பதே சாலச்சிறந்தது; போதைப்பொருளை பரிசோதனை முயற்சியாகவேனும் பாவிக்கக்கூடாது. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க போதிய வசதிகள் தற்போது வடபிரதேசத்தில் இல்லை. அத்துடன் புனர்வாழ்வளித்து பழைய நிலைக்கு கொண்டுவரக்கூடியவர்களின் எண்ணிக்கை மேற்கு நாடுகளிலேயே நூறுவீதம் அல்ல என்பதும் ஓர் முக்கியமான உண்மையாகும்.

போதைப் பொருள் தொடர்பான சட்டங்கள் என்ன?

இலங்கையில் போதைப் பொருள் தொடர்பான 1935-ம் ஆண்டுச் சட்டம் 1984-இல் திருத்தப்பட்டு மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் இதே போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே பலநாடுகளில் இக்குற்றங்கள் தொடர்பாக பலருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பலர் வேறு கடுமையான தண்டனைகளுடன் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் தயாரித்தல், கடத்துதல், வைத்திருத்தல் போன்றவற்றிற்கு தற்போது கடுமையான தண்டனைகளிலிருந்து மரண தண்டனை அல்லது ஆயுட்கால சிறைத் தண்டனைவரை வழங்கப்படுகின்றது.

பின்வரும் அளவுகளில் போதைப் பொருளை ஒருவர் வைத்திருந்தால் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்படும்.

2	கிராம்	அல்லது	அதற்கு	மேற்பட்ட	ஹெரோயின்
3	,,	,,	,,	,,	மோர்பின்
2	கிராம்	,,	,,	,,	கொக்கேயின்
500	கிராம்	,,	,,	,,	அபின்

வெளியீடு :

நற்சமூக நடுநிலையம்

115, 4-ம் குறுக்குத் தெரு

யாழ்ப்பாணம்

வெளியிட உதவியோர் ;

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்

பளை

அச்சுப் பதிவு :

ஆர் எஸ் யாழ்ப்பாணம்